# நீங்கள் உங்கள் நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்று எப்படி நிச்சயமாக சொல்கிறீர்கள்? நிகழ்ச்சி -4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில், எப்போதும் கேட்கப்படும் முக்கியமான மதம் சார்ந்த கேள்வி: “உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயம் இருக்கிறதா?”

**டாக்டர். எர்வின் லட்சர்:** நீங்கள் மரித்த அடுத்த விநாடியில் நீங்கள் ஒருவேளை அழகான சூழலை, கிறிஸ்துவின் மகிமையை பரலோகத்தை காண்பீர்கள். அல்லது நீங்கள் இன்று கற்பனை செய்து பார்க்க முடியாத பயங்கரமான சூழலை காண நேரிடும். அதை குறித்து யோசிப்பதை நிறுத்திவிட்டாலும், நமக்குள் எழும்பும் முக்கிய கேள்வி இதுதான், “என்னுடைய நித்தியத்தை எங்கே செலவிடப்போகிறேன்?”

**அறிவிப்பாளர்:** இந்த கேள்விக்கு பதிலளிக்க இருப்பவர், ஜானுடைய இன்றைய விருந்தினர் டாக்டர். எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் தலைமை போதகர் சிக்காகோ, இலினாசிஸ்.

அவர் மேலும் சில கேள்விகளுக்கும் பதிலளித்திடுவார்:

ஆதியில் தேவனோடு உறவு வைத்து விசுவாசிகளாக இருந்து பின்னர் தங்கள் வாழ்வில் விசுவாசித்திலிருந்து பின்வாங்கியவர்களைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது?

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடாமல் மரிக்கும்போது தேவனுக்கு அவனுக்காக செய்த செயல்களை அவை ரத்து செய்திடுமா?

நாம் இன்றைக்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நாளை இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றென்றைக்கும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயம் அடைவது எப்படி?

இந்த பிரத்தியேக நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம் இது ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். உங்களுடைய நித்தியத்தை நீங்கள் தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயத்தோட இருப்பது எப்படி என்பதை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். எல்லாரும் இந்த விஷயத்தை குறித்த நிச்சயத்தோடு இருக்க விரும்புகிறார்கள் என நம்புகிறேன். கேள்வி இதுதான், "எப்படி நிச்சயமாக இருக்க முடியும்?" கடந்த வாரம் நாம் பார்த்த காரியம் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் நீதி. சரி, இவை மேலோட்டமான வார்த்தைகள், எர்வின், அதை பற்றி கொஞ்சம்

சொல்லுங்க, கடந்த வாரம் என்ன பேசினோம்? ஏன் அது அவசியம்? உயிரோட்டத்துடன் சொல்லுங்க.

**லட்சர்:** நாம் அறிந்ததுபோல, கடந்த வாரத்தில் நாம், பரலோகம் செல்ல பூரணராயிருக்க வேண்டும் என்பதை பார்த்தோம். அது ஜனங்களுக்கு அதிர்ச்சியாயிருந்தது, ஏன்னா அனுபவ ஈதியா நமக்கு தெரியும் நாம யாரும் பூரணப்படல, அதுதா உண்மை. நாம் எல்லாரும் பாவிகள். ஆனால் நற்செய்தி என்னன்னா நம்முடைய நம்பிக்கையை கிறிஸ்துவின் மீது திருப்பும்போது, நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு அவருடைய நீதியை நமக்கு கொடுக்கிறார், அதனால் தேவனை பொருத்தவரை, நாம் பூரணமாணவர்கள்.

உதாரணத்திற்கு, இங்கு ஒரு எடுத்துக்காட்ட உங்களுக்கு சொல்றே. உங்களுடைய ஒரு புத்தகத்தை எடுத்துக்கிறேன். சிக்காகோவில் எயிட்ஸ்னால மரித்த ஒருவரை எனக்கு தெரியும். அவர் ஓரினச்சேர்க்கை விபச்சாரனாக இருந்தார் ஆனால் அவர் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து இரட்சிக்கப்பட்டார் மகிமையான மாற்றமடைந்தார் மேலும் தேவனுடைய இரட்சிப்பு மற்றும் மன்னிக்கும் கிருபையை குறித்து அற்புதமான சாட்சியாக இருந்தார். சரி, இந்த புத்தகம் ரோஜரின் வாழ்வின் சம்பவங்கள் என்று வைத்துக்கொள்வோம். அதை பார்க்கும் போது தோன்றும் விஷயம் அசுத்தம் பாவம் வஞ்சனை பாலியல் பாவம் கீழ்ப்படியாமை போன்றவை. அது அசுத்தமான புத்தகம், உண்மைதான்.

ஆனா இப்ப ஒருவேளை, ஜான், நம்மகிட்ட இன்னொரு புத்தகம் இருக்கு, கற்பனை பண்ணிக்கோங்க, அதில், இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் சம்பவங்கள் என்றிருக்கிறது. அந்த புத்தகத்தை திறக்கிறோம். அது அழகான வாழ்க்கை கீழ்ப்படிதல் எல்லாம் பூரணமாயிருக்கிறது. சரி இப்ப என்னன்னா, இயேசு தன்னுடைய புத்தகத்தில் இருக்கிற எல்லாவற்றையும், எல்லா பக்கங்களையும் எடுத்துக்கிட்டு, இப்ப இங்க வரலாம் அதாவது இந்த புத்தகம் ரோஜருடைய என்று நாம் வைத்துக்கொள்வோம் இப்ப இயேசு, கம்பீரமா, ரோஜர்கிட்ட சொல்றாரு, "நா உன்னுடைய புத்தகத்தில் இருக்கிறவற்றை எடுத்துக்கொள்கிறேன். அந்த பக்கங்களை நான் கிழித்துவிடுகிறேன். மேலட்டையை மட்டும் கொடு என்கிறார்." அதனால ரோஜர் இயேசுகிட்ட அட்டையை கொடுக்கிறார். இயேசு அவருடைய பக்கங்களை எடுத்து ரோஜருடையதுல வைக்கிறார். இப்ப நம்மகிட்ட என்ன இருக்கு? நம்மகிட்ட இருக்கிற புத்தகத்தின் பெயர் ரோஜருடைய வாழ்வின் சம்பவங்கள். அதற்கு உள்ளே பார்க்கும்போது நாம் எதை பார்க்கிறோம்? அழகான வாழ்க்கை, பரிபூரணம், கீழ்ப்படிதல், பரிசுத்தம், தேவனுடைய நீதியை காண்கிறோம். உண்மையில், அந்த புத்தகம் தேவனே பாராட்டும் விதத்தில் அழகாக இருக்கிறது. அதுதான் சுவிசேஷம் - இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலும் சிலுவையில் செய்த தியாகமும் நமக்கு பதிலாக அவர் ஏற்றுக்கொண்டதுதான், அவருடைய கிரியையினால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். அதை தான் விசுவாசத்தினால் உண்டாகும் நீதி என்கிறோம். இயேசு செய்த

செயலின் அடிப்படையில் நாம் நீதியாக இருக்கிறோம் என்பதை அறிக்கையிடுகிறோம். தேவன் பரலோகத்தில் இருக்கும்படி தேவன் நடப்பித்த கிரியை என்று அறிக்கையிடுகிறோம்.

ஆனால் இன்றைய நிகழ்ச்சியில், ஜான், இரட்சிப்பின் மற்றொரு பாகத்தை குறித்து பேச இருக்கிறார். ஜனங்கள் கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது தேவன் மனிதனுடைய உள்ளத்தில் நடப்பித்திடும் கிரியைகளைக் குறித்த பேசப்போகிறோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம். ஜனங்களுடைய எண்ணம் இதுதான், “ஓகே, நீதியாக்கப்படுதல் என்பது தேவன் என்னை நித்தியத்தில் சேர்த்துக்கொண்டார் என்பதை பிரமாணத்தின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, எனவே கிறிஸ்துவினிமித்தம் நான் என் பாவங்களுக்காக வெட்கப்படதேவையில்லை” - அல்லது ஒருவேளை, ஒரு பரிமாற்றம் நடந்திருக்கலாம் - நம்முடைய பாவங்கள் இயேசுவின் மீது, கிறிஸ:வின் மீது சுமத்தப்பட அவர் விலைகிரையம் செலுத்துகிறார், சிலுவையில் அதற்கான விலையை செலுத்திவிட்டார் - உண்மை இதுதான், கிறிஸ்துவினுடைய நீதியானது, அவருடைய பரிபூரண வாழ்வு, அவருடைய செயல்கள், நீங்கள் விரும்பினால், சட்டப்படி உண்களுக்கும் எனக்கும் கொடுக்கப்படும். அதுதான் பிரகடணிக்கப்படுகிறது. இப்போது கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு முன்பாக நிற்கிறேன். இங்கு ரோஜருடைய வாழ்வின் சம்பவங்கள்

என்ற பெயரில் ஒரு பரிமாற்றம் நடக்கிறது, கிறிஸ்துவின் வாழ்க்கையின் அம்சங்கள் ரோஜருடைய அட்டைக்குள்ளாக வைக்கப்படுகிறது அதனால் இப்ப கிறிஸ்துவோடு பூரணமடைந்தவர்களாய் தேவனுக்கு முன்பாக நிற்கிறோம். ஆனா ஜனங்களுடைய கருத்து, "ஓகே, சட்டப்படியாக ஒரு அறிக்கை அங்கே வெளியிடப்படுகிறது." அவங்க தெரிந்துகொள்ள விரும்புவது என்னன்னா, அதைதவிற நமக்குள்ளாக எதாவது சம்பவம் நடக்கிறதா?

**லட்சர்:** நிச்சயமாக

**ஆன்கர்பெர்க்:** வேறுவிதமாய் சொன்னால், புதிய பிறப்பு என்ற கருத்து என்ன சொல்கிறது?

**லட்சர்:** சரி, இயேசுவின் வார்த்தைகளை கவனியுங்கள். உண்மையில், இந்த காரியங்கள் அவர் நம்மேல் அதிகாரம் கொண்டிருக்கிறார். நிக்கொதேமு, அவர் ஒரு பரிசேயர்... சரி, பரிசேயர்கள் என்பவர்கள் பல விதங்களில் நல்லவர்களாக கருதப்படுகிறார்கள், ஆனா சட்டதிட்டங்களை நேசிக்கிறவர்கள், அவர்களால் கடைபிடிக்க முடியாத சட்டங்களை விடமாட்டார்கள். எளிமையா சொல்லனுன்னா, ஜனங்க மேல பாரத்தை வைக்கிறவர்கள். அவர்கள் ஜனங்களோடு மதத்தை வைத்து விவாதிப்பார்கள் யாராலும் கற்பனைகளுக்கு விளக்கம் கொடுத்து அவர்களிடமிருந்து மீல முடியாது. ஆனால் அதில் ஒருவர் தேவனுக்குரியவைகளை வாஞ்சிக்கிறவராக இருக்கிறார். இராத்திரியில்

இயேசுவிடம் வருகிறார். அவர் இயேசுவிடம் வருவதை ஒருவரும் அறிவதை அவர் விரும்பவில்லை என்பதை இது தெளிவாக்குகிறது. அவன் அவரிடத்தில், "ரபீ நீர் தேவனிடததிலிருந்து வந்த போதகர், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் இப்படிபட்டவைகளை செய்ய மாட்டான்." (யோவான் 3:2) மேலும் இயேசு, அவன் எதை பற்றியும் கேட்டாமல் இருந்தபோது அவர் அவனுக்கு சொல்லுகிறார், வசனம் 3ல் - எல்லாரும் இதை கேட்கவேண்டியது அவசியம், "மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்." யோவான் 3:3)

ஜான், ஒருநாள், ஒருவரிடம் நான் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார், "ஓ, நான் கிறிஸ்தவன், ஆனால் மறுபிறப்படையவில்லை." என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இயேசுவினால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு பரலோகம் செல்ல முடியாது. நீங்கள் மறுபிறப்பு அடையாவிட்டால் தேவனடைய ராஜ்யத்தைக் காண முடியாது.

இப்ப, நிக்கொதேமு இயேசு எதைப் பற்றி சொல்கிறார் என்பதை புரிந்துனொள்ள வில்லை. பிள்ளையை பெற்றெடுப்பதைக் குறித்து யோசித்தான், அதனால் அவன், "ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி பிறப்பான்? ஆவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்.

அதற்கு இயேசு, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்றார்." (யோவான் 3:4-5)

சரி, இந்த வசனத்தை வாசித்தவுடனே சிலருடைய கண்களில் படும் வார்த்தை ஞானஸ்நானம் என்பதுதான், ஆனால் இந்த பகுதி ஞானஸ்நானம் என்று சொல்லப்படவில்லை. என்னால முழுநிச்சயமாக சொல்ல முடியும் நிக்கோதேமுவுக்கு ஞானஸ்நானம் என்பதை குறித்த எந்த எண்ணமும் இருக்கவில்லை. இயேசு அவன் இதை அறிந்துகொள்ள விரும்பினார், அதனால நிக்கோதேது என்ன யோசித்திருப்பான் அவனிடம் இயேசு சொல்கிறார், "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டும்?" அவன் ஒருசில வசனங்களை நினைத்திருப்பான் எசேக்கியல் 36:25ஐ போல அங்கு தேவன், "நான் உங்களை சுத்தமாக்குவேன்.நான் உங்கள் மேல் சுத்தமான ஜலத்தை தெளிப்பேன். நான் உங்களுக்கு புதிதான ஆவியை கொடுத்து நவமான இருதயத்தைக் கொடுப்பேன்." வேதாகமத்தில், தேவனால் கழுவப்படுதல், தேவனால் சுத்திகரிக்கப்படுதல்;, பல சமயங்களில் ஆவியானவரின் கிரியைகளை கூறுகிறது மேலும் இயேசு கூறும்போது தண்ணீர் ஞானஸ்நானத்தை பற்றி இங்கு சொன்னதாக எனக்கு தோன்றவில்லை. உண்மையில், பழைய ஏற்பாட்டில் மக்கள் ஞானஸ்நானம் பெறவில்லையே. ஆசாரியன் தன்னுடைய கைகளையும் தனது கால்களையுமே கழுவினான், ஆனால் சாதாரண மக்கள் ஞானஸ்நானம்

பெறவில்லை. அதனால் நிக்கோதேமு ஞானஸ்நானத்தை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு இதை சொல்லவில்லை. ஆனால் நிக்கோதேமுவுக்கு நிச்சயமாக பழைய ஏற்ப்பாட்டில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு புதிய இருதயத்தை கொடுப்பார் என்பது தெரிந்திருக்கும், பெரும்பாலும் அவை நம்மை பற்றி தான் கூறுகிறது "தண்ணீர் தெளிக்கப்படுதல், தேவனால் சுத்திகரிக்கப்படுதல்."

அதனால், தான் சில மொழிபெயர்ப்புகள் இப்படியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "நீங்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்." இன்றைக்கு நாம் சொல்கிற விஷயம் என்னவென்றால் ஒருவன் தேவனால் நீதிமானாக்கப்படும்போது, நாம் சொன்னது போல, அந்த நிமிஷயத்தில் அவனுக்குள் ஏதோவொன்று நடக்கிறது. அவன் மறுபிறப்படைகிறான்.

மற்றொரு புதிய ஏற்ப்பாட்டின் வார்த்தை "புதுப்பித்தல்" எனக்கு ஆயிரக்கணக்காக வார்த்தை தெரியும், ஆனால் இதை நான் விளக்கி சொல்கிறேன்: தேவன் நமக்குள் ஒரு அற்புதத்தை நிகழ்த்தி நமக்கு அவருடைய சுபாவத்திற்கு ஒத்த சுபாவத்தை கொடுக்கிறார். ஒரு நபருக்குள் தேவனுடைய ஜீவனையும் தேவனுடைய சுபாவத்தை கொண்டுவருகிறது. சரி, இதை குறித்து தெளிவாக இருக்க விரும்புகிறேன். நீங்கள் மறு பிறப்பு அடைந்ததும், ஜான், நீங்கள் மறுபிறப்பு அடைவதற்கு முன்பு உங்களுக்குள் இல்லாத ஒன்று

இப்போது அங்கு தோன்றியிருக்கிறது, ஏனென்றால் வேதம் சொல்கிறது, " ஒரு கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, இதோ, எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5:17). எனவே நமக்கு ஒரு புதிய இருதயம் கொடுக்கப்படுகிறது. மேலும், இவையனைத்தும், சிலருடைய கேள்விகளுக்கு பதிலாயிருக்கிறது, "ஓ, நீங்க தா, சொன்னீங்க இயேசுவை உன் இரட்சகராக ஏற்றுக்கொண்டாலும் உன்னோட இஷ்டப்படி வாழலான்னு சொன்னீங்களே." ஆமா, இந்த மாதிரியான ஆபத்துகள் எப்போதும் காத்துக்கொண்டிருக்கிறது. ஆனா நினைவிருக்கட்டும், நம்முடைய இஷ்டப்படி நாம் வாழக்கோவதில்லை ஏனென்றால் நமக்கு புதிய விருப்பங்களை கொண்டு புதிய இருதயத் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இயேசு கூறியிருக்கிறார், "நீங்கள் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்யத்தை காண மாட்டீர்கள்." (யோவான் 3:3) எனவே இன்றைக்கு இதுவரை மறுபடியும் பிறக்காதவர்கள் கவனித்துக்கொண்டிருந்தால் நீங்கள் அதிக கவனாக கேளுங்கள், ஏன்னா இவை இயேசுவின் வார்த்தைகள்.

**ஆன்கர்பெர்க்:** ஏன் இந்த புதிய பிறப்பும், மறுபடியும் பிறப்பதும், அற்புதமானவை நாமே எதையும் செய்திட முடியாதா?

**லட்சர்:** தேவனுடைய அற்புதங்ளில் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. அதாவது, தேவன் பூமியை சிருஷ்டிக்க தீர்மானித்தபோது, நானும் நீங்களும் அருகில் இருந்திருந்தாலும் - இருந்தோம், நம்மால

முடிந்திருக்காது - நம்மிடம் சொல்லமாட்டார், “உனக்கு, இந்த நட்சத்திரங்கள் மற்ற எல்லாவற்றையும் சிருஷ்டிக்க தெரியுமே, எனக்கு உதவு முடியுமா?”

அதாவது, எனக்கு ஒரு கதை ரொம்ப பிடிக்கும், என்னுடைய புத்தகத்தில் இருக்கு, அதாவது, ஜார்ஜ் பெவர்லி ஷியா தெரியுமா, பில்லி கிரகாமுடைய பாடகர் 1954ல் ஹாரின்கே ஏரியாவில் இருந்தார். அவர் ஒரு பாடல் பாடினார், “வானத்தில் நட்சத்திரங்கள் வைக்கும்படியான அற்புதம் நடந்தது.” அங்கிருந்தவர்களில் ஒரு பெண் அவருடைய வார்த்தைகளின் அர்த்தத்தை புரிந்துகொள்ளாமல் அவரிடம் வந்து, “மிஸ்டர். சியா,நீங்க என்ன சொல்ல வர்றீங்க, “நட்சத்திரத்தை உண்டாக்க அமெரிக்கா தேவைபட்டதா!” சரி, அமெரிக்கா சில அற்புதமான விஷயங்களை செய்திருக்கிறது. சந்திரனில் மனிதனை நிற்க செய்தது. ஆனா இதை கேட்டுக்கொண்டிருப்பவர்களில் விஞ்ஞானிகள் இருந்தால் அவர்கள் ஒரு பகல் பொழுதில் ஆராய்ச்சி மையத்தில் ஒரே ஒரு அணுதிரள உண்டாக்க முடியுமா. எனநே தேவன் நமக்குள் ஒரு புதிய காரியத்தை உருவாக்கும்போது, நமக்கு அந்த செயலில் எந்த பங்கும் இல்லை. சரி, நாம் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் அதனால் அவருக்கு நன்றி நிறைந்த இருதயத்தோடு அனுமதி கொடுக்கிறோம், அவரே செய்ய, ஒத்துழைக்கிறோம். ஆனால், எல்லாவற்றிற்கும் இறுதியில், அது

தேவனுடைய அற்புதம் தான். அது திடீரென்று தோன்றிய அற்புதம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் அப்படி நடக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இப்போதும் ஒரு இடைவேளை எடுக்கலாம், எர்வின், நாம் திரும்ப வந்ததும், நாம் பேசபோகும் விஷயம் என்னவென்றால் புதிய பிறப்பு உண்டாகும்படி தங்களுடைய கிரியைகளை சார்ந்து இருந்தவர்கள் சந்திக்கு ஆபத்துகளைப் பற்றி சொல்லியிருந்தீர்கள் என்ன நடந்தது, என்பதை பார்க்கலாம். ஜனங்கள் கூட்டங்களில் முன்பாக செல்கிறார்கள். அவர்கள் தங்கள் கரங்களை உயர்த்துகிறார்கள். அவர்கள் ஒரு ஜெபத்தை செய்திருக்கலாம். ஒருNவுளை இரட்சிக்கப்படுகிறேன் என்ற தீர்மான அட்டையை பூர்த்தி செய்திருக்கலாம். அதுபோதும் என்று நினைக்கிறார்கள், ஆனால் அப்படியல்ல. இது எவ்வளவு முக்கியமானதென்பதை உணர்ந்திருப்பீர்;கள் மேலும் நாங்கள் என்ன சொல்ல வருகிறோம் என்று எதிர்பார்ப்போடு இருக்கலாம், இணைந்திருங்கள். மீண்டும் சந்திக்கிறோம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட் மீண்டும் வருக. நாம் டாக்டர் எர்வின் லட்சருடன் பேசிக்கொண்டிருக்கிறோம் இதனுடைய தலைப்பு என்னவென்றால், எப்படி நாம் உறுதியாயிருக்கலாம், நான் நித்தியத்தை தேவனோடு செலவிடுவேன் என்ற நிச்சயததை பெறுவது எப்படி, எல்லாரும் இந்த நிச்சயம் பெற விரும்புகிறோம். அதை

பார்த்துக்கொண்டிருக்கிறோம், ஜனங்கள் செய்கிற தவறுகளையும் நாம் கவனிக்கவேண்டும். நாம் திரும்பவும் பார்க்கலாம் நாம் மனிதனாக பிறந்த போது, அதில் 2 கூட்டுப்பொருள்கள் இடம்பெற்றுள்ளன, சுவாரஸ்யமான விஷயம், வேதாகமத்தில் மறுபடியும் பிறப்பதற்கு 2 கூட்டுப்பொருள்கள் அவசியமாக இருப்பதாக சொல்லப்படுகிறது. அதை விளக்கி சொல்லுங்க.

**லட்சர்:** முதலாவதாக, அப்பாவும் அம்மாவும் இணையும்போது அப்பா தன்னுடைய விந்தையும் அம்மா தனது கருமுட்டையையும் பகிர்ந்து கொடுக்கிறார்கள், அப்போது அங்கு ஒரு மனிதன் தோன்றுகிறான், அதைப் போலவோ இயேசு மறுபடியும் பிறப்பதை குறித்து சொல்லும்போது, 2 காரியங்கள் ஒன்றிணைகிறது. ஓன்று தேவனுடைய வார்த்தை. நாம் வார்த்தையிலிருந்து பிறந்திருக்கிறோம் என்கிறது ஏனெனில் அதுதான் சுவிசேஷத்தின் சத்தியம். முற்றொன்று தேவனுடைய ஆவியாக இருக்கிறது. எனவே தேவனுடைய வார்த்தையும் தேவ ஆவியும் ஒன்றாக செயல்பட்டு நம்முடைய இருதயத்தில் ஒரு அற்புதத்தை நிகழ்த்துகிறது, நம்மால் உருவாக்க முடியாத ஒரு அற்புதத்தை செய்கிறது. அது தேவனால் உண்டாகும் காரியம். உண்மையில், இயேசு நீ மறுபிறப்படைய வேண்டும் என்று சொல்லும்போது, கிரேக்கத்தில் சொல்லப்படுகிறது, “நீ மேலிருந்து பிறந்திருக்க வேண்டும்.” இன்றைக்கு கேட்டுக்கொண்டிருக்கிற உங்களுக்கு, தேவனுடைய அற்புதம் அவசியமாயிருக்கிறது. நான்

அனுபவித்த அந்த அற்புதம். நீங்களும் அனுபவித்திருக்கீங்க. ஆனா அது இல்லாம, வேதம் சொல்கிறது, நாம் பரலோகத்தை தரிசிக்க முடியாது - இவை இயேசுவால் உரைக்கப்பட்ட வார்த்தைகள் (யோவான் 3:3)

**ஆன்கர்பெர்க்:** ஒரு குழந்தையினுடைய மனித சுபாவங்கள் பார்க்க சுவாரஸ்யமாக இருக்கும். ஒரு குழந்தை பிறக்கும் நீங்கள் சொல்வீர்கள், “ஓ, அம்மாவ போலவே இருக்கா. அப்பா மாதிரி இருக்கா.” சில குணாதிசயங்கள் காணப்படும். அது உண்மைதான். ஆவிக்குரிய ஈதியிலும் உண்மைதானா?

**லட்சர்:** நிச்சயமாக. உண்மைதா, அதன் விளைவுதான், தேவனைப்போல இருப்பது. அதாவது, தேவனை தரித்திருப்பதென்று வேதம் சொல்கிறது. தேவனடைய குணநலன்களை நம்மில் கொண்டிருக்கவேண்டும், அதாவது - அன்பு, சந்தோஷம், சமாதானம், இவற்றை தேவனுடைய ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் பிறக்கும்படி செய்கிறார். (கலா. 5:22-23)

**ஆன்கர்பெர்க்:** நீதிநிறைந்த தன்மைகள்.

**லட்சர்:** தேவனுடைய நீதியான தன்மைகள். இப்ப, இதற்கு அர்த்தம் நாம் தேவனைப் போல ஆவோம் என்பதல்ல. அதாவது, சுற்றி திரிந்திடும் சிறிய தேவர்கள் போல ஆகிட மாட்டோம். இல்லை, நித்தியத்திற்கும் நாம் மனிதர்களாகவே இருந்திடுவோம், ஆனால்

தேவன் தமது சுபாவத்தை நம்மோடு பகிர்ந்துகொள்வது ஆச்சரியமான ஒன்றல்லவா இந்த பூமியில் வாழும்போதே அந்த சிலாக்கியத்தை பெறுகிறோம், நம்முடைய எல்லா போராட்டங்கள் மத்தியில் தொடர்ந்தேர்ச்சியான பாவங்கள் மத்தியில், தேவனைப் போல மாறுவதற்கான சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** அடுத்த குறிப்பை பார்க்கலாம் அது என்னவென்றால், உங்க புத்தகத்தில் ஜனங்களுக்கு சில எச்சரிப்புகளை கொடுத்திருக்கிறீர்கள். அதில் நீங்கள்  முன்னதாக வரும்படி தீர்மானித்தவர்களை குறித்து சொல்லுகிறீர்கள், தங்களை கைகளை உயர்த்தினார்கள், ஜெபிக்கவும் செய்தார்கள், ஆனால் இரட்சிக்கப்படவில்லை.

**லட்சர்:** தட்ஸ் ரைட். இப்போது இதை பார்க்கலாம். சிறுவர்களைக் குறித்து பேசலாம்.

**ஆன்கர்பெர்க்:** ஓகே

**லட்சர்:** கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்படும் பிள்ளை. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறான். அவனுக்கு  5- 6 வயசிருக்கும். சுpல நாட்களில் அவன் வளர்ந்த பிறகு இரட்சிக்கப்பட்டதன் அறிவு இல்லாதவனாக காணப்படுகிறான், அதன் நிச்சயம் அவனுக்கு இல்லை. அவனுடைய பெற்றோர் சொல்கிறார்கள், “ஓ, இல்ல,இல்ல. நீ 5 வயசா இருந்தப்ப

அந்த ஜெபத்தை செய்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாய்." சரி, இதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்: சிறுவர் 5 அல்லது 6 வயதில் இரட்சிக்கப்படக் கூடும் என நம்புகிறேன். ஆனால், ஒரு சில சந்தர்ப்பங்களில் பொற்றோர் ஞானமாக நடக்கவேண்டியது அவசியம், "ஆல்ரைட், உனக்கு நிச்சயமா தெரியலையா, அதை சரி செய்திடலாம். உன்னுடைய  நம்பிக்கையை கிறிஸ்துவின் மீது வைத்திடு, அவரை உன்னுடையவராக ஏற்றுக்கொள், அப்போது விசுவாசத்தின் நிச்சயத்தை பெறலாம் என்றிடுங்கள்."

என்னுடைய சாட்சியை நான் சொல்கிறேன். நானே சாட்சி.நான் கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்டேன். ஓவ்வொரு இரவும் இயேசுவை என் உள்ளத்தில் வரும்படி கேட்டேன் ஆனால் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை. எனக்கு வித்தியாசமா தெரியல. அப்ப எனக்குள்ளையே யோசித்தேன், "இரட்சிக்கப்பட முடியாது. எங்க போறது?" என்னுடைய 14வது வயதில் என் பெற்றோர் எனக்கு சொன்னது, "இதப்பாரு, நீ கிறிஸ்துவை விசுவாசிக்கிறாயா என்ற நிச்சயம் எங்களுக்கு இன்னும் வரலன்னு சொன்னாங்க." அதற்கு நான், "ஆமா, நா முயற்சித்தேன், ஆனா வேல செய்யலன்னு சொன்ன." அதற்கு அவர்கள், "நீ என்ன செய்யனுன்னு தெரியுமா, விசுவாச அடியை எடுத்து வைக்கனுன்னு சொன்னாங்க." அப்பதான் எனக்கு புரிந்தது சிறந்த சொற்பொருள் என்பது இயேசுவை இருதயத்தில் வரும்படி அழைப்பதில்லை." நான் நினைக்கிறேன் ஒரு கட்டத்தில்,

ஜான், நாம் அதை பற்றி பேச வேண்டும். இதை தான் அடிக்கடி பயன்படுத்துகிறோம் ஆனால் சிறந்த சொற்கள் இது அல்ல. அதாவது, சிறுவர்கள் சிலநேரங்கள் சொல்வார்கள், "அவர், உள்ள வந்தா, ஒருவேளை இரத்தத்தால நனஞ்சுடுவாரோ?" புரியுதா, அவங்க தத்ரூபமாக சிந்திப்பார்கள். சொல்வதற்கு சிறந்தது எது தெரியுமா, "பாவிகளுக்கு பதிலாக இயேசு சிலுவையில் மரித்தார். அவரை உன்னுடைய பாவங்களை ஏற்றவராக நம்பி ஏன் நீ அவரை ஏற்றுக்கொள்ள கூடாது? என்னுடைய 14ம் வயதில் அதை செய்த போது, இரட்சிப்பின் நிச்சயத்தை நான் பெற்றுக்கொண்டேன்.

எனவே, ஒரு ஆபத்து சிறவர்களாக இருக்கும்போது உண்டாகிறது. அடுத்த ஆபத்து மக்கள் கூட்டங்களில் முன்பாக செல்வது. சரி, இது மிகவும் நுட்பமானது, ஓகே? ஆனா ஒருவர் அழைப்பைக் கொடுக்கும்போது: "இரட்சிக்கப்பட முன்னாக வாருங்கள்." உண்மையான பிரச்சனை. முதலாவதாக, என்னைப் போன்றவராக இருந்தால் நிலை என்ன, நூற்றுக்கணக்கான மக்கள் இருக்கும் கூட்டத்தில் முன்னால போக கூச்சம்?

**ஆன்கர்பெர்க்:** ஏன்னா உங்களால முடியாதுன்னு நீங்க நினைச்சீங்க, முன்னால போறதவிட நகரத்துக்கு போக இருந்தீங்க.

**லட்சர்:** ஜான், என்னுடைய சாட்சிய அப்படியே சொல்றீங்க. எனக்கு 10 அல்லது 11 வயதாக இருந்தப்ப அப்படிதா நினைச்சேன். அப்ப நா, "சொன்னேன், இரட்சிக்கப்படும்படி நா முன்னால போரதவிட, நா

நரகத்துக்கே போயிடுவேன்.” அதாவது, நாங்க எல்லாரும் ஒன்னா இருந்தப்ப என்னோட சகோதரிகள் என்ன கட்டிலுக்கு கீழ இருந்து இழுக்கவேண்டியிருக்கும், வெட்கப்படுவேன்.

நீங்க முன்னால வந்து நிற்பதால நீங்க இரட்சிப்படுவீர்கள் என்ற எண்ணத்தை உண்டாக்குவது இரண்டாவது காரியம். இதுவும் தவறான எண்ணம்.

**ஆன்கர்பெர்க்:** இதை தவறு என்று சொல்ல காரணம் என்னவென்றால் ஜனங்கள் இருக்கையைவிட்டு முன்பாக வருவதையும் ஒரு ஜெபத்தை செய்வதையும் நம்புகிறார்கள். செய்கையை நம்புகிறார்கள். கிறிஸ்துவை நம்புவது இல்லை.

**லட்சர்:** ஜனங்களுக்கு இது அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்கலாம்: ஜெபம் உங்களை இரட்சித்திடாது. இதுவரை அப்படியில்லை இனியும் அப்படியில்லை. இதுதான் அவர்கள் கவனத்தை ஈர்த்திடும். விசுவாசத்தை கிறிஸ்துவில் கொண்டிருக்கவேண்டும். நம் நம்பிக்கையை கிறிஸ்துவின் மீது வைப்பதாகும். அதாவது, சிலுவையில் இருந்த கள்ளர்களில் ஒருவன் உண்மையில் ஜெபிக்கவில்லை அவன் சொன்னான், “என்னை நினைவுகூர்ந்திடும்.” அது, ஒரு ஜெபமென்று எனக்கு தோன்றவில்லை. “உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது என்னை நினைத்துக்கொள்ளும்.” (லூக்கா 23:42). ஆனால் அவனுக்குள் இருந்த கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையே முக்கியம். சுரியான வார்த்தைகளை சொல்லுவது சுலபம்

தான், தீர்மான அட்டையை பூர்த்தி செய்யலாம், அப்படியிருந்தும் இருதயத்தில் மறுபிறப்படையாமல் இருக்க வாய்ப்பிருக்கிறது. ஒரு உண்மை சம்பவத்தை சொல்ல இது சரியான நேரம் என்று நம்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஓகே

**லட்சர்:** கனடாவில், இந்த தெருவில் இருந்த அனைவருக்கும் சில வாலிபர்கள் ஒரு காரியத்தை சொல்ல நம்பச் செய்தனர், அவர்கள் சொன்னார்கள், "இவ்வளவு பணங்கொடுத்தால் பச்சை மரங்களை நாட்டிடுவோம் என்றனர்." அதனால் அங்கம்பக்கத்தினர் சேர்ந்து எல்லாரும், "செய்ய தீர்மானித்தனர்." வாலிபர்கள் வந்து, பணத்தை வாங்கிக்கொண்டு, செடிகளை நட்டுவைத்தனர். சில வாரங்கள் கழித்து அவை ஃபிரொன் நிறமாக மாறியது. அக்கம்பக்கத்தினர் அதிகமாய் தண்ணீர் ஊற்றினார்கள். அதிக தண்ணீர் ஊற்றினபோது, அதிகமாக நிறம் மாறியது. இறுதியாக, ஒருவருக்கு சந்தேனம் வந்தது, "என்ன மரத்தை இவர்கள் நட்டுவைத்திருக்கிறார்கள்? அதை பிடுங்கி பார்த்தபோது அது வெறும் கிளையென தெரிந்தது. வேர் இல்லை. ஒன்றுமில்லை. இயேசு சொல்கிறார், "என்னுடைய பிதாவினால் நாட்டப்படாத எந்த மரமும் பிடுங்கப்படும்." (மத்.15:13). நம்மை திணறவைக்கிறதே? நான் நம்புகிறேன், இன்றைக்கு கேட்டுக்கொண்டிருப்பவர்களிலும், இப்படிபட்ட தன்மையுள்ளவர்கள் இருக்கமுடியும், ஓ, என்ன சொல்றேன்னா? பசுமையான தோற்றத்தை, உடையவர்களாக காணப்படலாம். மற்ற மரங்களைப்போலவே

காணப்படலாம், ஆனால் வேரில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை தேவன் உயிர்ப்பித்திருக்க மாட்டார், அவர்களுக்கு மறுபிறப்பு அடையும் சிலாக்கியம் அளிக்கப்படாமல் இருந்திருக்கலாம் ஏனென்றால் அவர்கள் - அந்த தோற்றத்தை விரும்பினார்கள் - ஆனால் அவர்களிடம் "இரட்சிப்பிற்கான நம்பிக்கை இல்லை. விரும்பவில்லை." அவர்கள் முன்பாக வந்திருக்கலாம். தீர்மான அட்டையை பூர்த்திசெய்திருக்கலாம். எனவே நாம் அதிக கவனத்தோடு இருக்கவேண்டியது அவசியம்.

**ஆன்கர்பெர்க்:** இரட்சிப்பிற்கான நம்பிக்கை என்றால் என்ன? அறிவுபூர்வமான நம்பிக்கைக்கும் அதற்குமுள்ள வித்தியாசம் என்ன.

**லட்சர்:** சரி, அதாவது, இங்க நம்மிடம் ஒரு சிறந்த உதாரணம் இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். என்னன்னா, இந்த நாற்காலி என்னை தாங்கும் என்ற நம்பிக்கை எனக்குள் பொதுவாக தோன்ற முடியும். அது மனநிலையின் தீர்மானம். ஆனா அதில உட்கார்ந்த பிறகு அந்த முடிவுக்கு வரல, ஓகே, நா அப்ப உண்மையா நம்பறேன்." நூ அனுபவித்து அதை நம்பும்போது, அப்பாடா, ஜான், இந்த நாற்காலி என்ன தாங்கிக்கொள்கிறது என்பேன். சரியா? அதே மாதிரி தான், ஜனங்கள் ஒருவேளை, "இயேசுவை நேசிக்கிறேன். அவரை நம்புகிறேன். அவர் என் இரட்சகரென விசுவாசிக்கிறேன் என்பார்கள். ஆனா நான் சொல்கிறேன், அதாவது உலகத்திலேயே தூரமான விஷயங்கள் என்னன்னு கேட்டா தலையும் இருதயமும்ன்னு சொல்வேன் அங்கதா விசுவாசம் இடமாறுகிறது, உதவியற்ற பாவியாக நிற்கிற நிலை

தெரியவரும் அப்போதுதான், "இயேசுவே, நீர் ஒருவர் தான் அவசியம். என் இரட்சகராயிரும். எனக்காக மரித்தீர் என்பதை ஏற்றுக்கொள்கிறேன் என்றிடுவோம்.

**ஆன்கர்பெர்க்:** மீதமுள்ள சில நிமிடங்களில், மோசேயையும் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்ட சர்ப்பத்தை பற்றியும் விளக்கமாக சொல்லுங்க.

**லட்சர்:** இது சுவாரஸ்யமானது. உண்மையில், யோவான் 3ம் அதிகாரத்தில் இருக்கிறது, அதைதான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இயேசு நிக்கோதேமுவுடன் பேசும் போது சொல்கிறார், "மோசே வனாந்தரத்திலே சர்ப்பத்தை உயர்த்தினது போல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனை அடையும்படின்னு உயர்த்தப்படுவார் என்றார்." (யோவான் 3:14-15). அந்த சம்பவம் நினைவிருக்கிறதா? ஜனங்களுக்குள் வாதை உண்டானது. கீழ்ப்படியாமையினாலே அவர்கள் தேவனால் சபிக்கப்பட்டனர் தேவன் வாதையை கட்டளையிட்டார். அப்பொழுது மோசே, "என்ன செய்வேனென்றான் அதற்கு தேவன், "நீ ஒரு சர்ப்பத்தை" - வெண்கல சர்ப்பமென்று நினைக்கிறேன், ஒரு சர்ப்பம் - நீ அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வை கடிப்பவன் அதை நோக்கி பார்த்தால் பிழைப்பான்." (எண்.21). சரி, ஜான்,என்னுடைய கற்பனைப்படி அவர்கள் மத்தியில் விஞ்ஞானிகள் இருந்திருப்பார்கள், அறித்திறனுடையவர்கள், இருந்திருப்பார்கள் அவர்கள் நிச்சயம், "இதில் எந்த அர்த்தமும் இல்லை

என்றிருப்பார்கள்.” எனக்கு வெளியில கம்பத்தின்மேல் தூக்கப்பட்டிருக்கும் சர்ப்பத்தை பார்ப்பதில் என்ன சம்பந்தம் உள்ளது, என்னுடைய சரீர வியாதியை அது எப்படி பாதித்து என் வியாதியை நிறுத்த முடியும்? அறியில்பூர்வமா, மருத்துவரீதியா, எந்தவித்திலும், அர்த்தமில்லாத ஒன்று. ஆனா உங்களுக்கு தெரியுமா, தேவன் சொன்னார், “நீங்க அப்படியே செய்தா, நான் அற்புதம் செய்திடுவேன்.”

இன்றைக்கு பார்த்துக்கொண்டிருப்பவர்கள் ஒருவேளை கேட்கலாம், “அதாவது, பல வருடங்களுக்கு முன்பு இயேசு மரித்திருக்க, 2000 வருடங்களுக்கு முன்பு சம்பவித்த அவருடைய மரணத்திற்கும் எனக்கும் என்ன சம்பந்தமென்றிடலாம்? என்ன தொடர்பு உள்ளது? தேவன் தொடர்பை ஏற்படுத்துகிறார். இன்றைக்கு சிலர் இயேசுவை நோக்கிப்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் இருக்கலாம், கிறிஸ்துவை பார்க்கிறவர்கள் அந்த விசுவாசக் கண்களோடு இயேசுவை நோக்கிப் பார்த்து, அந்த கம்பத்தின் மீதுள்ளவராக அல்ல, சிலுவையின் மீது, இருப்பவராக, மரித்து உயிர்த்தெழுந்தவராக பரலோகத்திற்கு ஏறிச்சென்றவரை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன் என்றிடுங்கள்.” அப்பொழுது நீங்கள் நீதிமானாக்கப்படுவதை மட்டும் அனுபவிப்பதில்லை, அதைப்பற்றி முந்தைய நிகழ்ச்சியில் பேசினோம், அதிலும் மேலானவற்றை காண்பீர்கள். அவர்களுடைய இருதயங்களில் அற்புதங்கள் நிகழ்ந்திடும் அப்பொழுது அவர்கள், “எனக்கு இது புரியல,

என்ன நடந்ததென்று தெரியவில்லை என்பார்கள்.” அதுதான் புதிதாய் பிறக்கும் அனுபவம்.

**ஆன்கர்பெர்க்:** ஒருவேளை இதை கேட்டுக்கொண்டிருக்கிற நீங்கள் நிக்கொதேமுவைப் போல இருக்கலாம். மதவாதிகள். சட்டங்கள் இருக்கலாம் ஆனால் நடைமுறை செயல்கள் இருக்காது. எர்வின், மறுபிறப்பின் அனுபவத்தை பெற விரும்புகிறவர்களுக்காக நீங்க ஜெபிக்கும்படி விரும்புகிறேன். தேவன் கிரியை செய்ய விரும்பிடுவார்கள். ஜெபிக்கிறீங்களா?

**லட்சர்:** ஜான், நா இவங்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன் ஒருவேளை இதை பார்த்துக்கொண்டிருப்பர்களில் யாராவது, “ஆமா, நா மகாபாவி என்று சொல்லலாம்.” உங்களுடைய பாவம் எவ்வளவு பெரியது என்பது ஒரு பொருட்டல்ல, நீங்க செய்ய வேண்டிய ஒரு காரியம் தேவனுடைய அதிசயத்தையும் அவருடைய அன்பையும் சிலுவையில் இயேசு செய்த செயலின் பரிபூரணத்தை ஏற்றுக்கொள்ளும் விருப்பத்தை கொண்டிருக்கவேண்டும். எனவே விருப்பமுடையவர்கள் யாரும் ஒதுக்கப்படுவது கிடையாது.

**ஆன்கர்பெர்க்:** நிச்சயமாக.

**லட்சர்:** ஜெபிப்போம். பிதாவே, எங்களுக்காக மரிக்கும்படி இயேசு வந்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் சிலுவையில் உயர்த்தப்பட்டிருந்ததை விசுவாசத்தோடு நோக்கி பார்க்கிறவர்கள்

பெற்றுக்கொள்ளும் ஈவுக்காக உமக்கு நன்றி. இன்றைக்கும் அநேகர் பரிசுத்த ஆவியினால் மறுபிறப்படையும்படி ஜெபிக்கிறோம் அவர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நோக்கியிருக்கிறார்கள். அவர்கள் இந்த ஜெபத்தை ஏறெடுக்கும் பெலத்தை அவர்களுக்கு அருளிடும்: தேவனே, நான் பாவி என்பதை அறிவேன். என்னை நானே இரட்சிக்க முடியாது. பாவத்தின் நோய் என் சரீரத்தில் பரவியிருக்கிறது, என் மனதை அசுத்தமாக்கிற்று. ஆனால் இப்போது கிறிஸ்துவை நோக்கி பார்க்கிறேன். என்னுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டார் என்பதை ஒப்புக்கொள்கிறேன். என்னை சொந்த இரட்சகராக அவரை ஏற்றுக்கொள்கிறேன்." இரங்கும், தேவனே, நித்திய ஜீவனுக்குரிய நிச்சயத்தை அவர்கள் பெற்றுக்கொள்ள செய்யும். இயேசுவின் நாமத்தில். ஆமென்.

**ஆன்கர்பெர்க்:** எர்வின், அருமையாயிருந்தது. அடுத்த வாரம் இதை தொடர்ந்து பார்க்கப்போகிறோம். எதை பற்றி நாம் பேச இருக்கிறோம்?

**லட்சர்:** ஜான், ஒருவர் சொன்ன ஒரு விஷயத்தை பற்றி பேசப்போகிறோம், "99 முறை நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்." நித்தியமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்ற நிச்சயத்தை பெறுவது சாத்தியமா உண்மையா என்பதை பற்றி பேச இருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** உங்களில் ஒவ்வொருவரும், அதை அறிந்துகொள்ள விரும்பிடுவீர்கள். எங்களோடு இணைந்திருங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.